வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.06.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 170 பக்கங்கள் : 12

# இந்திய துணைத் தூதரகம் முன்பாக இன்று போராட்டம்!

## கடற்றொழிலாளர் சம்மேளனம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் முன்பாக மீனவர்கள் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு போராட்டம் நடைபெறும் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அத்துடன், தமக்கு விரை வில் தீர்வு கிடைக்காதுவிடின் பாராளுமன்றத்தையும் முற்றுகையிட்டு போராடு வோம் என்றும் நேற்று சம்மேளனத்தின் பணி மனையில் நடத்திய செய்தியாளர்

11



## புலமைப்பரிசில் பரீட்சைக்கு புள்ளி வழங்கலில் புதிய முறை!

கொழும்பு, ஜூன் 18

புலமைப்பரிசில் பரீட்சைக்கு புள்ளி வழங்கும் போது தரம் 4, 5 வகுப்புகளில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளும் சேர்க்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

புத்தளம் - சிலாபம் - தம்மிஸ்ஸர மகா வித்தியா லயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு,

புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் படி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 70 புள்ளிகள் வழங் கப்படும். மீதி 30 புள்ளிகள் தரம் 4, 5இல் அந்த மாணவர்கள் பெற்ற புள்ளிகளை அடிப் படையாக வைத்து வழங்கப்படும். இதனை

11

## ஐ. எம். எவ்வின் தாளத்துக்கு ஆடுகிறது பொம்மை அரசு!



கொழும்பு, ஜூன் 18

சர்வதேச நாணய நிதியத் தின் (ஐ. எம். எவ்) தாளத்துக்கு ஆடும் பொம்மை ஆட்சியே நாட்டில் உள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.

மக்கள் வறுமையில் வாடி னாலும் வரிக்கு மேல் வரி விதிப்பது நின்றபாடில்லை. சர்வதேச நாணய நிதியம் கூறியதாக வாடகை வீட்டுக் கும் வரி விதிக்கும் சூத்திரத்தை அரசாங்கம் உருவாக்கி வருகிறது. சர்வதேச நாணய நிதியம் சொல்வதை எல்லாம் செய்வ தற்கு இந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை வழங்கப்பட வில்லை. அரசாங்கம் வினை திறன் மிக்கதாக இருந்தால், மக்களுக்காக நல்லதோர்

11

## தமிழ் பொது வேட்பாளரை தனிக்கட்சி தீர்மானிக்க முடியாது

### வியாழேந்திரன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 18

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் பொது வேட்பா ளர் தொடர்பில் தனி ஒரு கட்சியால் தீர்மானிக்க முடி யாது என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந் திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு, மலையக தமிழர்களை ஒட்டு மொத்தமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசி யல் தலைமைகள், புத்திஜீவிகள் என அனைவரை யும் ஒன்றிணைத்து தமிழ் பொது வேட்பாளர்

11

## வடக்கில் கடலட்டை உற்பத்தி அபரிமித வளர்ச்சி அடைந்தது

### கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கில் கடலட்டை உற்பத்தி அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடலட்டை பண்ணையாளர்களு டன் நேற்று அவர் நடத்திய சந்திப்பிலேயே மேற் கண்ட வாறு கூறினார்.

கடலட்டை தொடர்பான தொழிலில் ஈடுபடு வதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் சீனர்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

11

## மக்களோடு நாங்களும் குழப்பத்தில் உள்ளோம்!

### நாமல் எம். பி. சொல்கிறார்


கொழும்பு, ஜூன் 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர் கள் ஒரு கட்சியில் இருக்கும்போது அதனை விசாரித்த வர்களும் அதே கட்சியில் உள்ளனர். இதனால் மக்க ளோடு நாமும் குழப்பத்தில் உள்ளோம் - இவ்வாறு தெரி வித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ.

கம்பஹா - பியகமவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் கிராமிய

11



ஹஜ் பெருநாளான நேற்று இஸ்லாமிய மக்கள் நாடு முழுவதும் தொழுகையுடன் ஆரம்பித்து கொண்டாடினர். (தொடர்புடைய செய்திகள் பக்கம் 6, 7இல்)

## பிறப்பு வீதம் வெகுவாக குறைந்தது

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் கடந்த 5 வருடங்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிக மான பிறப்புகள் குறை வடைந்துள்ளன என்று மகப்பேற்றியல் மருத் துவ நிபுணர்கள் தெரி வித்துள்ளனர்.

அத்துடன், உயிரி ழந்தவர்களின் எண் ணிக்கையும் கணிசமா னளவு அதிகரித்துள் ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில், முதியோர் சமூகம் அதிகரிப்பதன் மூல மும், இளம் சமூகம் குறைவதன் மூலமும் நாட்டில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படக் கூடும்.

2017 ஆம் ஆண்டு இந்த நாட்டில் பிறந்தவர்களின்

11

## மன்னார் வளைகுடா கரைகளில் 8 மில். தொன் பிளாஸ்ரிக் கழிவு

### 50 வீதமானவை இந்திய மீனவருடையவை

கொழும்பு, ஜூன் 18

மன்னார் வளைகுடா வில் 80 இலட்சம் தொன் னுக்கும் அதிகமான பிளாஸ்ரிக் கழிவுகள் காணப்படுகின்றன.

இவற்றில், 50 வீதத்துக் கும் அதிகமானவை இந் திய மீனவர்களால் கைவிடப்பட்டவை என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்தியா, இலங்கை யைச் சேர்ந்த பல்வேறு கடல்சார் ஆய்வு நிறுவ னங்கள் மன்னார் வளை குடாவில் நடத்திய ஆய்வில் இந்தத்

11

## வடக்கில் மது விற்பனையகம் எட்டாத தூரத்தில் உள்ளதாம்

கொழும்பு, ஜூன் 18

வடக்கு மாகாணத்தில் சட்டபூர்வ மதுபான விற் பனை நிலையங்கள் வாடிக்கையாளர்கள் அணுக முடி யாத தூரத்தில் உள்ளன. இது அவர்களை சட்டவிரோத மதுபானத்தை நாட வழிவகுக்கிறது என்று நாட்டின் பிரபல பியர் உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் சட்டபூர்வ மதுபான நிலையத்துக்கான சராசரி தூரம் 45 சதுர கிலோ மீற்றராகும். இதுவே வடக்கு மாகாணத்தில் 167 சதுர கி. மீற்றராக உள்ளது. இது சட்டவிரோத

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நரி ஒன்று வீதியால் சென்று கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் இருந்த வீட்டின் வேலியோரத்தில் நின்ற திராட்சை கொடியில் பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன.

நரி எட்டி அதனை கௌவுவதற்கு முயற்சித்தது. பழம் எட்டவில்லை.

மீண்டும் ஒரு தடவை எட்டிப்பறிக்க முயன்றது - முடியவில்லை. மூன்றாவது தடவையும் முயன்ற பின்னர்தான் அதற்கு புரிந்தது. தன்னால் அதனை பறிக்க முடியாது என்று.

"சீச்... சீ... இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக் கொண்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டது.

அட... இது என்ன மூன்றாம் வகுப்பிலேயே நாங்கள் படித்த கதையாச்சே என்று நீங்கள் சலித்துக்கொள்வது புரிகின்றது. என்ன செய்வது நமது காலத்தில் மூன்றாம் வகுப்பில் படிப்பித்த பல விடயங்களை இப்போது படிப்பிக்கிறார்களோ என்ற சந்தேகம் இருந்ததால் படிக்காதவர்களுக்காக சொல்ல வேண்டியதாயிற்று.

இப்போதெல்லாம் யார் தொலைபேசி அழைப்பில் வந்தாலும் அல்லது நேரில் கண்டாலும் முதலில் கேட்பது அந்த விசயத்தைத்தான்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி வெற்றி பெறுமா? என்பதுதான்.

இவ்வாறு கேட்கும் அவர்களுக்கு இப்படி சந்தேகம் ஏற்படுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. யார் யாரையெல்லாம் பயன்படுத்தமுடியுமோ அவர்களையெல்லாம் பயன்படுத்தி - இந்த முயற்சியை நீர்த்துப்போகச் செய்ய பல்வேறு தரப்பினரும் முயன்று கொண்டிருக்கின்றனர்.

அதையும் விட, உள்ளே ஆதரவாளர்களாக நுழைந்து தமது தேவைகளை அல்லது விருப்புகளை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று முயன்று பார்த்துவிட்டு, அது "வேலைக்கு ஆகாது" என்பது தெரிந்ததும் அதிலிருந்து வெளியேறிவிட்டு மேலே சொன்னதுபோல "சீச்... சீ... இந்தப் பழம் புளிக்கும்" என்ற பாணியிலும் சிலர் கருத்துச் சொல்ல முற்படுகின்றனர். அவர்களில் சிலருக்கு தாங்களோ அல்லது தங்களுக்கு வேண்டியவர்களையோ பொது வேட்பாளர் ஆக்கிவிடலாம் என்ற நப்பாசையும் உண்டு. தங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பதைத் தெரிந்துகொண்டதும் சிலர் வெளியே போய் இந்தப் பழம் புளிக்கும் என்கின்றனர். இவர்கள் போன்றவர்களின் கதைகளை கேட்டதும் சிலர் தடுமாறிக் கொண்டு தொலைபேசி அழைப்பில் வந்துவிடுகின்றனர்.

இனி இன்று எழுத வந்த விடயத்துக்கு வருகின்றோம்.

தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டம் மீண்டும் ஒருமுறை கூடிக் கலைந்திருக்கின்றது. அதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதுதான்.

இவர்கள் இவ்வாறு முடிவெடுத்து அறிவித்த அதேகாலப்பகுதியில்தான், கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தனும் ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறார்.

"ரணில், சஜித், அநுர ஆகிய மூவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றார்கள் என்றால் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வாக எந்தவிதமான விடயங்களையும் கருமங்களையும் முன்வைக்கப் போகின்றார்கள் என்பதை தமது விஞ்ஞாபனங்களில் வெளிப்படுத்த வேண்டும். அதன் பின்னர் எமது மக்களின் நிலைப்பாடுகளை புரிந்து நாம் யாரை ஆதரிப்பது என்பது குறித்து முடிவெடுப்போம்" என்று தெரிவித்திருக்கிறார் சம்பந்தன்.

தேர்தல் விஞ்ஞாபனம் எப்போது வெளியிடப்படும் என்பதை சம்பந்தன் அறியாதவர் அல்லர். அதாவது, ஒருவர் தனது வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னரே தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவார். அதாவது, வேட்புமனு தாக்கல் முடிந்த பின்னரே.

இதன்மூலம் தமிழ் அரசுக் கட்சி ஒரு தகவலை தெளிவாக சொல்லியிருக்கின்றது.

தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தை தற்போது முன்னெடுத்துவரும் சிவில் சமூகக் குழுக்கள் - தமிழ் மக்கள் பொதுச்சபையினர் - இதற்கு உடன்படுகின்ற அரசியல் கட்சிகள் - பிரமுகர்களுடன் இணைந்து ஒரு பொது வேட்பாளரை களம் இறக்கி வேட்புமனுவையும் தாக்கல் செய்த பின்னர் மற்றைய மூன்று வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் என்ன இருக்கிறது என்று பார்த்து யாரை அதரிப்பது என்று தமிழ் அரசுக் கட்சியினர் முடிவெடுப்பார்கள்.

இதன்மூலம் அவர்கள் சொல்ல வருவது அந்த மூன்று வேட்பாளர்களில் யாராவது உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி தீர்வைத் தருவதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தால் அவரை ஆதரிப்பார்கள்.

சம்பந்தன் சொல்கின்ற மூவருமே தமது முடிவை மிகத் தெளிவாக ஏற்கனவே சொல்லிவிட்ட பின்னரும் - மூவருடனும் பேசுவதற்கே எதுவும் இல்லாத போது - எதற்காக சம்பந்தன் ஐயா காத்திருக்கப் போகிறார் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்தது.

இந்த செய்தியைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் கேட்டார், "சம்பந்தனோ அல்லது அவருடன் சேர்ந்தவர்களோ ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டுதான் அரசியல் செய்கிறார்கள் என்பது ஏற்கனவே தெரிந்ததுதான். ஆனால், அவர்களின் இந்த முடிவை ஏற்றுக்கொண்டு கலைந்து செல்கின்ற தமிழ் அரசின் மத்திய குழு உறுப்பினர்களை எப்படிச் சொல்வது?"

- ஊர்க்குருவி.




## தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த சகல பொது அமைப்புகளும் ஆதரவு

கிளிநொச்சி, ஜூன் 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை சகல பொது அமைப்புகளும் ஏற்றுக்கொண்டுள்ளன என்று தமிழ் மக்கள் பொதுச் சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தப் பாடுபடும் மக்கள் அமைப்பான தமிழ் மக்கள் பொதுச் சபை கிளிநொச்சியில் கூட்டமொன்றை நடத்தியிருந்தது.

கிளிநாச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் சுமார் 200க்கும் குறையாத வெவ்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டிருந்தன. விவசாய அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

தமிழ் மக்கள் பொதுச் சபை சார்பில் நிலாந்தன், பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், சி. யோதிலிங்கம், ரவீந்திரன் இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதில் கலந்து கொண்டவர்கள் பெருமளவு கேள்விகளை கேட்டார்கள். முடிவில், அனைத்து அமைப்புகளும் பொதுத்தமிழ் வேட்பாளரை ஏற்றுக் கொள்வதாக பகிரங்கமாக அறிவித்தன. (ஐ)

## பருத்தித்துறை ஊழியர்களை தாக்கியவர்களுக்கு மறியல்!

வடமராட்சி, ஜூன் 18

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் தாதியர், காவலாளிமீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிமன்ற நீதிவான் பொ. கிருஷாந்தன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடத்தில் செயல்பட்டு வரும் ஏழாம் இலக்க விடுதியில் நோயாளி ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றவில்லை என்று கூறி கடமையிலிருந்த தாதியர்கள், மருத்துவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, தாதியர் ஒருவரையும் காவலாளி ஒருவரையும் தாக்கினர்.

இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து கடந்த 10ஆம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனை ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய துன்னாலையை சேர்ந்த மூவரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். இதன்போதே அவர்கள் மூவரையும் நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## உள்ளூராட்சி ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை!

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 18

உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அனைத்து தரப்பு ஊழியர்களையும் நிரந்தர மாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட செயலகத்தில் நடை பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

## விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜூன் 18

பாதசாரி கடவையில் வீதியை கடந்தவர்களை சீன நாட்டவர் பயணித்த சொகுசு கார் மோதியதில் தந்தை உயிரிழந்தார். மகன் படுகாயமடைந்தார்.

களுத்துறை நகரில் நேற்று இடம்பெற்ற விபத்தில் நாகொடை சந்தர்ஷனாராம வீதியை சேர்ந்த சதுன் அரவிந்த வயது 46 என்பவரே உயிரிழந்தார்.

காரை ஓட்டி வந்த சீன நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## வெள்ளை வானில் வந்தவர்கள் இளைஞரை கடத்தி சென்றனர்!

கொழும்பு, ஜூன் 18

இளைஞர் ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

களுத்துறை - ஹீனடியங்கலை பகுதியை சேர்ந்த 24 வயது இளைஞரே இவ்வாறு கடத்தப்பட்டவராவார்.

கடத்தப்பட்ட இளைஞரின் தாயார் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேவாலயம் ஒன்றுக்கு அருகில் வான் ஒன்றில் வந்த முகமூடி அணிந்த சிலரே இளைஞர் தாக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளார்.

இதேநேரம், இந்தக் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்ட நிலையில் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.06.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், வைகாசி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முதலில் சிங்கள மக்களுக்கு கூறுங்கள்...!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் தீவிரம் காண்பித்துவரும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதில் தீவிரம் காண்பித்து வருகின்றனர். இதற்காக வடக்கில் அரசியல் வாதிகளின் வீடுகள் தேடிச் செல்கின்றனர். முதலில், தமிழ் அரசியல் வாதிகள் கூறுவதைக் கேட்டு தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா என்பது வேறு விடயம்.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் காணப்பட்ட அரசியல் நிலைமை முற்றிலும் வேறானது. ராஜபக்ஷக்கள் மீதான கோபமும் வெறுப்புமே தமிழ் மக்களின் வாக்களிப்பை தீர்மானித் திருந்தன. தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இதனை மிகவும் இலகுவாக பயன்படுத்திக் கொண்டனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இம்முறை தேர்தலில் எதனைக் கொண்டு தமிழ் மக்களை கையாள முடியும் என்பதே முதன்மையான கேள்வியாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தென்னிலங்கை வேட்பாளர்கள் அனைவரும் வடக்கை நோக்கி ஓடி வருகின்றனர். தமிழ் அரசு கட்சியின் பணிமனையில் மந்திராலோசனையில் ஈடுபடுகின்றனர். முதலில் தமிழ் அரசு கட்சி கூறுவதைக் கேட்டு வாக்களிக்கக்கூடிய நிலைமை இருக்கின்றதா என்பது அடுத்த கேள்வியாகும்.

வடக்குக்கு வந்திருந்த பிரதான வேட்பாளர்கள் அனைவருமே, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசி வருகின்றனர். ஆரம்பத்தில் தடுமாற்றங்களை வெளியிட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதில் ஆட்சேபனைகள் இல்லை என்கிறார்.

இதன்மூலம் அனைத்து வேட்பளார்களுமே 13ஆவது திருத்தச் சட்டத்தில் உடன்படுவது போன்ற தோற்றப்பாடே தெரிகின்றது. ஆனால், தேர்தல் முடிந்ததும் இவர்களின் அணுகுமுறை எவ்வாறு அமைந்திருக்கும்? ஏனெனில், இவர்கள் எவருமே தென்னிலங்கை மக்கள் மத்தியில் இதனை உறுதியாகக் கூறவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது. அதாவது, பொலிஸ் அதிகாரம் அடங்கலாக அமுலாக்குவதன் அவசியப்பாட்டை சிங்கள மக்களுக்குக் கூற வேண்டும்.

தென்பகுதியில் மாகாண சபைகள் வினைதிறனாக இயங்கியமை போன்று வடக்கிலும் கிழக்கிலும் இயங்க வேண்டும். அத்தோடு அதிலிருந்து இன்னும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். அதனை நான் செய்வேன். இதுவே, எனது அரசியல் நிலைப்பாடாகும் - இதற்கான மக்கள் ஆணையை நீங்கள் எனக்குத் தர வேண்டும் - இவ்வாறுதான் கூற வேண்டும். ஆனால், எந்தவொரு வேட்பாளரும் இதுவரையில் சிங்கள மக்களை நோக்கி இவ்வாறான உறுதியான குரலில் பேசவில்லை.

கடந்த காலத்தில் ஒரு கட்சி கூறுவதை - செய்ய முற்படுவதை இன்னொரு கட்சி எதிர்த்து வந்திருப்பதே இலங்கைத் தீவின் அரசியல் வரலாறாகும். இதற்கு எந்தவொரு கட்சியும் விதிவிலக்கல்ல - எந்தவொரு தென்னிலங்கை அரசியல்வாதியும் விதிவிலக்கல்ல.

சந்திரிகா குமாரதுங்க சில விடயங்களை முன்னெடுக்க முயற்சித்திருந்தார் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அப்போது எதிரணியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க அதற்கு ஒத்துழைக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷவுடன் கூட்டணி அமைத்திருந்த ஜே. வி. பி., மகிந்தவின் அன்றைய அனைத்து நகர்வுகளுக்கும் உறுதுணையாகவே இருந்தது. இந்த நிலைமையை இனியும் தொடரமாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

# யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியவர் கிளிநொச்சியில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற கைதி ஒருவர் போதைப்பொருளுடன் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் - மடத்தடியை சேர்ந்த 23 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதான நபர், அக்கராயன் காட்டுப்பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்தபோது யாழ். பிராந்திய புலனாய்வு பொலிஸாரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

இதன்போது, அவரிடமிருந்து 3.8 கிராம் ஐஸ் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான நபர், யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்தவர் என்றும் இதற்காக நீதிமன்றங்களால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் எனவும் கூறப்பட்டது.

சந்தேகநபர் கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தப்பிச் சென்றிருந்தார். இதையடுத்து, இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர் விசாரணைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-01)

# “பெரமுனவில் 50 வீதத்தினர் ஆதரித்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயார்!”

கொழும்பு, ஜூன் 18

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் 50 வீதமானவர்கள் என்னை ஆதரிக்கத் தயாராக இருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சி தனக்கு 10 நிபந்தனைகளை விதித்துள்ளது. அந்த நிபந்தனைகளின்படிதான் அனைத்து திட்டங்களையும் தயார் செய்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

அந்த 10 நிபந்தனைகளுக்கு அமைவாக எவ்வாறு பாதுகாப்பை கட்டியெழுப்புவது மற்றும் பொருளாதாரத்தை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பிலும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும், "நான் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர். என்ன நடக்கிறது என்று பார்ப்போம். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 115 நாட்களே உள்ளன." என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாளை தியாகிகள் தினம்; அம்பாறையில் நிகழ்வுகள்

நிந்தவூர், ஜூன் 18

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்) 34 ஆவது தியாகிகள் தினம் அம்பாறை மாவட்டத்தில் நாளை புதன் கிழமை பரவலாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இம்முறை தியாகிகள் தின நிகழ்வை உணர்வுபூர்வமாகவும் அமைதியான முறையிலும் அனுஷ்டிக்கப்பட உள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான சிவசுந்தரம் புண்ணியநாதன் (கரன்) தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் சார்பில் போராடி உயிர்நீத்தவர்கள் ஒவ்வொரு வருடமும் ஜூன் 19 ஆம் திகதி நினைவு கூரப்படுகிறார்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை தலைமையேற்று வழி நடத்திய செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவும் மற்றும் 13 தோழர்களும் தமிழகத்தில் படுகொலை செய்யப்பட்ட தினமே தியாகிகள் தினம் என்ற பெயரில் நினைவுகூரப்படுகின்றது.

இதன்படி வழமை போன்று பெருநிகழ்வாக அல்லாது அமைதியான ஆடம்பரமற்றவையாகவும், உணர்வுபூர்வமாகவும் அம்பாறை மாவட்டத்தில் தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக மாவட்ட இணைப்பாளர் சிவசுந்தரம் புண்ணியநாதன் (கரன்) தெரிவித்தார். (ஐ - 06)

# மலையக ரயில் சேவை வழமைக்கு திரும்பியது

கொழும்பு, ஜூன் 18


மலையக ரயில் போக்குவரத்து சேவை நேற்று காலை முதல் வழமைக்குத் திரும்பியதாக புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு நுவரெலியா - வடகொடை பாலத்தில் வைத்து டிக்கிரி மெனிக்கே ரயில் தடம் புரண்டது.

இதனால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. கடுமையான முயற்சிகளின் பின்னர் நேற்றுக் காலையே டிக்கிரி மெனிக்கே மீண்டும் ஓடச் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து மலையகத்துக்கான ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்கு திரும்பின. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 18 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆனி 04
நல்ல நேரம் : 02.53 - 04.23
ராகு காலம் : 10.23 - 11.53
திதி : துவாதசி




**மேடம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். திருமணப் பேச்சுவார்த்தை கைகூடி வரும். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்திவரும். புது நட்பு மலரும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். பயணங்களால் பயனடைவீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பழை ய கடன் பிரச்னைகள் கட்டுக்குள் வரும். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் தடையின்றி முடிவடையும். நட்பு வட்டம் விரிவடையும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உயர்வு பெறும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
சுறுசுறுப்பாக செயல்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். மனநிறைவு கிட்டும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும் நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பல முறை போராடி முடிப்பீர்கள். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். சகோதர வகையில் சங்கடங்கள் வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள்.

**தனுசு**
வீரியத்தை விட காரியம் பெரிது என்பதை உணர்வீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.


**மகரம்**
உங்கள் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். புதிய திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப் பார்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறதியால் பிரச்னை வந்து நீங்கும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

# பாராளுமன்றில் பேசாவிட்டாலும் மக்கள் மன்றத்தில் பேசுகிறோம்!

## கூறுகிறார் சீமான்




சென்னை, ஜூன் 18

நாங்கள் பாராளுமன்றத்துக்கு சென்று பேசாவிட்டாலும், மக்கள் மன்றத்தில் தொடர்ச்சியாக எங்கள் கருத்துகளை முன்வைத்து வருகிறோம் - இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

தமிழ்நாடு மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில், நாம் தமிழர் கட்சியின் மாநில மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளர் காளியம்மாளின் சகோதரி திருமண விழா நடைபெற்றது. இந்த விழாவில் உரையாற்றியபோதே சீமான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தலில் வெல்வது இல்லை எங்கள் கனவு. மக்களின் இதயங்களை, சிந்தனையை வெல்வதுதான் எங்கள் கனவு. அந்த வகையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம். மிகப்பெரும் கடமையும், பொறுப்பும் எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. எங்களுக்கு உயர்ந்த இலட்சிய நோக்கமும் உள்ளது. அதை அடைய கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறோம் - இவ்வாறு சீமான் கூறினார். (எ)

# மோடியின் தமிழக வருகை ஒத்திவைப்பு



சென்னை, ஜூன் 18

சென்னை - நாகர்கோவில் வந்தே பாரத் ரயில் சேவை உட்பட பல்வேறு ரயில்வே திட்டங்களை ஆரம்பித்து வைக்க, பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் சென்னைக்கு 20 ஆம் திகதி வரவிருந்த நிலையில், அவரது பயணம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதமராக 3 ஆவது முறையாக மோடி பொறுப்பேற்ற பிறகு, சென்னைக்கு முதல் முறையாக வரும் 20 ஆம் திகதி வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் சென்னை பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பா. ஜ. கவும் இதை உறுதிப்படுத்தியுள்ளது. மாநில நிர்வாகிகள், மாவட்ட தலைவர்களுக்கு தமிழக பா. ஜ. க. துணை தலைவர் கரு. நாகராஜன் எழுதியுள்ள கடிதத்தில், 'பிரதமர் மோடி வரும் 20 ஆம் திகதி தமிழகம் வருகை தரவிருந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மறு திகதி அறிவித்த பிறகு, திட்டமிட்டபடி சிறப்பான வரவேற்புக்கு ஏற்பாடு செய்வோம்' என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# "சரியான தலைமை இல்லாததால் அ. தி. மு. க. சின்னாபின்னமாகிறது"



காரைக்குடி, ஜூன் 18

சரியான தலைமை இல்லாமல் அ. தி. மு. க. சின்னா பின்னமாகப் போய்க் கொண்டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது என பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

காரைக்குடி ஈதுக்கா மைதானத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற பக்ரீத் சிறப்புத் தொழுகையில் பங்கேற்ற கார்த்தி சிதம்பரம் முஸ்லிம்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். காங்கிரஸ் எப்போதும் மத ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்கும். நீட் ஒரு மோசடி தேர்வு. நீட் தேர்வு நம்பகத்தன்மையை இழந்துவிட்டது. வினாத்தாள் கசிந்தது, கருணை மதிப்பெண் வழங்கியது என பல முறைகேடுகள் நடந்துள்ளன.

இதனால் நீட் தேர்வை இரத்து செய்ய வேண்டும்- என்றார். (எ)

# காங்கிரஸில் உள்ள செல்வாக்கை ஸ்டாலின் பயன்படுத்த வேண்டும்

## சொல்கிறார் ஓ. பி. எஸ்.



சென்னை, ஜூன் 18

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் காங்கிரஸ் தலைமையிடத்திலும், கர்நாடக காங்கிரஸ் கட்சி தலைவர்களிடத்திலும் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழகத்துக்கு உரிய நீரினை பெற்றுத் தர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு விவசாய பெருமக்களிடையே ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

ஓ. பி. எஸ். விடுத்துள்ள அறிக்கையில், உச்ச நீதிமன்றம் மற்றும் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். ஆனால், தமிழகத்துக்கு திறந்துவிட வேண்டிய உரிய நீரினை உரிய நேரத்தில் வழங்க மறுப்பதை கர்நாடக அரசு வாடிக்கையாகக் கொண்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருங்காட்சியகத்தின் தீயணைப்பு கட்டமைப்பால் 9 கோடி ரூபா நட்டம்

## கணக்காய்வாளர் அறிக்கையில் வெளிக்கொணர்வு

கொழும்பு, ஜூன் 18

**கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் தீயணைப்பு கட்டமைப்பை நிறுவுவதில் சுமார் 9 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தின் 2023 ஆண்டு அறிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தீயணைப்பு கட்டமைப்பை நிறுவதற்கான பொறுப்பு தகுதியற்ற ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டமையே நட்டம் ஏற்படுவதற்கான காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதலாவது ஒப்பந்ததாரர் முறையாக செயற்படாததால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு மற்றுமொரு தரப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2021 ஜனவரியில் இதற்காக முதலாவது ஒப்பந்ததாரர் 10 கோடி ரூபா மதிப்பீட்டை வழங்கியுள்ளார்.

இதில், 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையில் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்பின்னர், 18 கோடி ரூபா மதிப்பீட்டில் இடைநிறுத்தப்பட்ட பணிகள் கடந்த ஆண்டு டிசெம்பரில் இரண்டாவது ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சுமார் 9 கோடி ரூபா கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# தலையில் தேங்காய் விழுந்து 11 மாத குழந்தை உயிரிழப்பு!

## தெல்தோட்டையில் சோகம்

கொழும்பு, ஜூன் 18

கண்டி, கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை நாராங்ஹின்ன தோட்டத்தில், 11 மாதக் குழந்தையின் தலையில் தேங்காய் விழுந்ததில் அக்குழந்தை உயிரிழந்துள்ளது.

லோகேஸ்வரன் கியாஸ்சினி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையை தந்தை தூக்கிச் செல்லும்போதே இத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தலைப் பகுதியில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் தெல்தோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின் அங்கு இருந்து உடனடியாக பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

குழந்தை அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. மேலதிக விசாரணை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போலிக் கடவுச்சீட்டு மூலம் லண்டன் செல்ல முயன்ற யுவதி கைதாகினார்!

கொழும்பு, ஜூன் 18

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி லண்டனுக்கு தப்பிச் செல்ல முயன்ற பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

திருகோணமலையில் வசிக்கும் 24 வயதுடைய யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண்ணின் இந்த விமான பயணத்துக்கு உதவிய தரகர் ஒருவரும் இதன்போது கைதுசெய்யப்பட்டதாக விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.


சந்தேக நபரான பெண் அனைத்து அனுமதி நடைமுறைகளையும் முடித்துவிட்டு குடியகல்வு சேவை கரும பீடத்துக்கு வந்து கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது கடவுச்சீட்டில் உள்ள புகைப்படம் அவருடையது அல்ல என்பதைக் கண்டறிந்ததால் அவர் தலைமை குடிவரவு அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டார்.

இதைத்தொடர்ந்து நடத்தப்பட்ட தொழில்நுட்ப சோதனையில், மற்றொரு பெண்ணின் கடவுச்சீட்டில் இந்த பெண்ணின் தகவல்கள் பதிவு செய்து போலியாக தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# அனலைதீவு கடலில் மர்மப்பெட்டி மீட்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 18

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனலைதீவு கடற்பரப்பில் மிதந்து வந்த மர்மப் பெட்டியொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அனலைதீவு கடற்பரப்பில் மிதந்து வந்த மர்மப் பெட்டியை கண்ட அனலைதீவு பொதுமக்கள் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்படி பெட்டியை மீட்டுள்ளனர். மேற்படி பெட்டியினுள் தொலைத் தொடர்பு கருவி இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மரக்கறி விலைகள் உயர்வு!


கொழும்பு, ஜூன் 18

மரக்கறிகளின் விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சந்தை நிலவரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, பேலியகொடை மனிங் சந்தையில் ஒரு கிலோ கரட் 300 ரூபாவாகவும், ஒரு கிலோ போஞ்சி 500 ரூபாவாகவும், ஒரு கிலோ பீட்ரூட் 450 ரூபாவாகவும், ஒரு கிலோ லீக்ஸ் 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

அத்தோடு, ஒரு கிலோ தக்காளி 400 ரூபாவாகவும் ஒரு கிலோ பச்சை மிளகாய் 300 ரூபாவாகவும், ஒரு கிலோ கறி மிளகாய் 450 ரூபாவாகவும், ஒரு கிலோ கத்தரிக்காய் 460 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், ஒரு கிலோ தேசிக்காய் 1,200 ரூபாவாகவும், ஒரு கிலோ இஞ்சி 2,700 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.



இதேவேளை, நாராஹென்பிட்டி சந்தையில் ஒரு கிலோ கரட் 480 ரூபாவாகவும், ஒரு கிலோ போஞ்சி 700 ரூபாவாகவும், ஒரு கிலோ பீட்ரூட் 680 ரூபாவாகவும், ஒரு கிலோ லீக்ஸ் 700 ரூபாவாகவும் விற்பனை செய் ஷயப்படுகிறது.

அத்தோடு, ஒரு கிலோ பச்சை மிளகாய் 400 ரூபாவாகவும் ஒரு கிலோ கறி மிளகாய் 600 ரூபாவாகவும் ஒரு கிலோ கத்தரிக்காய் 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோ தேசிக்காய் 1,400 ரூபாவாகவும், ஒரு கிலோ இஞ்சி 3,700 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்கலாம்!

## பொருள்களின் விலைகள் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 18

சிமெந்து, கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்து வருவதால், கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்குமாறு தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கம் மக்களிடம் கோரியுள்ளது.

கடந்த காலத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியுடன், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பல காரணிகளால் கட்டுமானத் துறையின் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்திருந்தன.

எவ்வாறாயினும், பொருளாதாரம் மீட்சியடைந்துள்ள நிலையில், தற்போது அவற்றின் விலையில் வீழ்ச்சி காணப்படுவதாக தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர -

கடந்த காலத்தில் கட்டுமானத் துறை முற்றிலும் சரிந்திருந்தது. இன்று, இத்துறையில் ஓரளவு மீட்சி ஏற்பட்டுள்ளது. சிமெந்து, இரும்பு, நிறப்பூச்சு போன்ற மூலப்பொருட்களின் விலைகள் ஓரளவுக்கு குறைந்துள்ளது. மொத்தத்தில் வங்கி வட்டி குறைந்துள்ளதால் மகிழ்ச்சி அடையலாம். எமது வாடிக்கையாளர்கள் வங்கிக் கடனை பெற்று வீடு கட்டும் சூழல் ஓரளவுக்கு ஏற்பட்டுள்ளது என்றார். (அ)

# தே. எண்ணெய் விலை உயர்வு!

கொழும்பு, ஜூன் 18

ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை 100 ரூபாவுக்கும் மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

ஒரு லீற்றர் தேங்காய் எண்ணையின் விலை 180 மற்றும் 200 ரூபாய்க்கு இடையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயின் தற்போதைய சில்லறை விலை ரூ. 550 ஆகும். (அ)

# சட்டவிரோதமாக நடத்தப்படும் 900 சாரதி பயிற்சி பாடசாலைகள்

கொழும்பு, ஜூன் 18

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கூற்றுப்படி, சட்டவிரோதமாக நடத்தப்படும் 900 சாரதி பயிற்சி பாடசாலை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அந்த பாடசாலைகளை அடுத்த வாரத்தில் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுருத்த வீரசிங்க, தனது உள்ளக கணக்கெடுப்பின்படி நாடளாவிய ரீதியில் 1500 சாரதி பயிற்சி பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் அதில் 600 சாரதி பயிற்சி பாடசாலைகள் மாத்திரமே சட்ட ரீதியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அனுமதியுடன் இயங்குவதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஒழுங்கு முறை இல்லாத காரணத்தினால் சிலர் தாங்களாகவே சாரதி பயிற்சிப் பாடசாலைகளை ஆரம்பித்து பதிவு செய்த ஒட்டுநர் பயிற்சி பாடசாலைகளை சட்டவிரோதமாக தொடர்பு கொண்டு அவற்றை நடத்தி வருவதாக ஆணையாளர் நாயகம் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான வாக்குப் பெட்டிகள் தயாரிப்பு தீவிரம்!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் தகவல்

கொழும்பு, ஜூன் 18

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான வாக்குப்பெட்டிகளை தயார்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.**



எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடைபெறவுள்ளதால், வாக்குப்பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

வாக்குச் சாவடிகள் குறித்த விவரங்கள் கிடைத்தவுடன், வாக்குப் பெட்டிகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக சரி செய்ய ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்குப்பதிவுக்காக பயன்படுத்தப்பட்ட ஏராளமான வாக்குப்பெட்டிகள் சேதமடைந்துள்ளதாகவும், அவற்றை அரச தொழிற் சாலைக்கு அனுப்பி சரி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதா கவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தலை இலக்காகக் கொண்டு அதிகாரிகள் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்படும் எனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க, அடுத்த வாரம் உள்ளூராட்சி தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுகள் குறித்தும் அங்கு விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல் ஆணையம் சமீபத்தில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும்!

## கூறுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 18



தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயங்குகிறது. அதனாலேயே தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயல்கிறது. நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றால் தற்போதைய ஜனாதிபதி உட்பட அவரது ஆதரவாளர்களும் வீடு செல்ல வேண்டி ஏற்படும்.

தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. நாட்டை வீழ்ச்சிப்பாதையில் இருந்து கட்டியெழுப்புவதற்கான எந்தவித வேலைத் திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை.

நாட்டில் விரைவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதுடன் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் எமது ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்.

நாட்டுக்கு பொருத்தமான வகையிலேயே ஒப்பந்தங்கள் அமைய வேண்டும் - என்றார்.

# இளநீர் ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 18

வெண்ணிற ஈ தாக்கத்தினால் இளநீர் செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வெண்ணிற ஈ நோய்த் தாக்கத்தினால் இளநீர் ஏற்றுமதியில் 30 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய வறட்சியினால் வெண்ணிற ஈக்களின் பரவல் அதிகரித்துள்ளது.

வெண்ணிற ஈ, மஞ்சள் நிறத்தினால் அதிகம் ஈர்க்கப்படுவதால், இளநீர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 2 கோடி ரூபா பெறுமதியான சிகரெட் மீட்பு!

கொழும்பு, ஜூன் 18

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 120000 சிகரெட்டுகளை கைப்பற்றிய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபர்களாக மூவரைக் கைது செய்தனர்.

கரையோர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்பு 10 பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான பல வகையான சிகரட் பெட்டிகளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மீட்டனர்.

மாளிகாவத்தை மற்றும் கொழும்பு 10 பிரதேசங்களைச் சேர்ந்த 32 - 45 வயதுக்குட்பட்ட சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக நாட்டிற்குள் கடத்தி வரப்பட்ட இந்த சிகரெட்டுகள், நாடு முழுவதும் விநியோகிக்கத் தயாராக வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (அ)

# சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான மதிப்பெண் முறை மிகவிரைவில்!

கொழும்பு, ஜூன் 18

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான மதிப்பெண் முறை விரைவில் ஆரம்பிக்கப்படும் என பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

தற்போது பணிகள் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக பதில் போக்குவரத்து அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்களில் போக்குவரத்து குற்றச்சாட்டுகள் தொடர்பில் தினசரி போக்குவரத்து பொலிஸாரால் கிட்டத்தட்ட 1000 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். மாதாந்தம் கிட்டத்தட்ட 30,0000 பேர் வரை கைது செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது.

அதற்கமைய, மதிப்பெண் முறை அறிமுகப்படுத்திய பின்னர் இவ்வாறு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சாரதிகளின் புள்ளிகள் குறைக்கப்படும்.

சாரதி அனுமதிப் பத்திரத்தில் மொத்தமான 24 புள்ளிகள் சாரதி அனுமதிப் பத்திரத்தில் வழங்கப்படும். ஒரு விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றால் 10 புள்ளிகள் குறைக்கப்படும்.

தையில் வாகனம் ஓட்டினால் 6 புள்ளிகள் குறைக்கப்படும். 24 புள்ளிகள் குறைக்கப்பட்டால் 2 வருடங்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும்.

2 வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து பரீட்சை எழுதி சாரதி அனுமதி பத்திரம் பெறும் பாடசாலைக்குச் சென்று அனுமதிப் பத்திரம் பெறவேண்டும்.

விதிகளை மீறும் சாரதிகளுக்கு பயிற்சியளித்த தரப்பினர் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் - என்றார். (அ)

# 18 கிலோ கேரளக் கஞ்சாவுடன் அல்லைப்பிட்டியில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 18



யாழ்ப்பாணத்தில் 18 கிலோ கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடி படையினர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

அல்லைப்பிட்டிப் பகுதியில் கேரளக் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடி படையினர் 18 கிலோ கஞ்சாவை மீட்டனர்.

அவற்றைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரையும் மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (அ)

# சீன பிரஜைகள் பயணித்த கார் மோதி தந்தை மரணம்

கொழும்பு, ஜூன் 18

களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மகன் படுகாயமடைந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை நாகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய தந்தையொருவரே உயிரிழந்துள்ளார்.

**மகன் படுகாயம்**

பேருவளையிலிருந்து களுத்துறை நோக்கி சீன பிரஜைகளுடன் பயணித்த கார் ஒன்று வீதியில் பாதசாரி கடவையை கடந்த தந்தை மற்றும் மகன் மீது மோதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் தந்தை உயிரிழந்துள்ளதுடன், மகன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சீன பிரஜைகள் பயணித்த காரின் சாரதி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நீரை விநியோகிக்கும் குழாயில் மோதிய கார்!

கொழும்பு, ஜூன் 18

கொழும்பு ஹைலெவல் வீதியின் கொடகமை பகுதியில் நேற்று அதிகாலை லபுகம நீர்த்தேக்கத்தில் இருந்து நீரை விநியோகம் செய்யும் பெரிய குழாயில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி மோதியதில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

நீர் குழாயில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதால் பாரியளவு நீர் வெளியேறி வருவதுடன், குறித்த இடத்தில் உள்ள மின் கம்பமும் உடைந்து வீதியில் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் சிக்கிய கார் சாரதி உட்பட இருவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும், இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கார் அதிவேகமாக வந்து வீதியை விட்டு விலகி தண்ணீர் குழாயில் மோதி கவிழ்ந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்காக போரிடும் இலங்கையர் குறித்து கடும் மௌனம் சாதிக்கின்றது உக்ரைன்!

## விவரங்களை வழங்குமாறு இலங்கை தொடர் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 18

**ரஷ்யாவுக்கு எதிரான போரில் தன்னுடைய இராணுவத்துடன் இணைந்து போரிடும் இலங்கையர்கள் குறித்து உக்ரைன் கடும் மௌனத்தை கடைப்பிடிக்கின்றது.**

**உக்ரைனுக்காக போரிடும் இலங்கையர்கள் குறித்து இலங்கை விவரங்களை கோரியுள்ளபோதிலும் உக்ரைன் இறுக்கமான மௌனத்தை கடைப்பிடிக்கின்றது என உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**



வெளிவிவகார அமைச்சும் துருக்கிக்கான இலங்கை தூதர கமும் உக்ரைனுடன் இணைந்து போரிடும் இலங்கையர்கள் குறித்த விவரங்களை இரண்டு வாரங்களுக்கு முன்னர் கோரி யிருந்தபோதிலும் உக்ரைன் எந்த பதிலையும் வழங்கவில்லை என விடயமறிந்த வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

இலங்கை தனது முன்னைய வேண்டுகோளை நினைவு படுத்தி ஒரு வாரத்துக்கு முன்னர் மீண்டும் தகவல் அனுப்பி யிருந்ததாகவும் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவுக்கான இலங்கை தூதரகமும் இந்தியாவுக்கான உக்ரைன் தூதரகத்திடம் தகவல்களை கோரியுள்ளது.

இதேவேளை, உக்ரைன் தனது நாட்டின் சட்டத்திற்கு ஏற்ப இலங்கையர்களை படையணியில் இணைத்து கொண்டுள்ளது என தெரிவிக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடு தகவல்களை வழங்குவது தாமதமாகலாம் என்ற யதார்த்தத்தை வெளிவிவகார அமைச்சு உணர்ந்துள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ரஷ்யாவில் போரிடும் இலங்கையர்களை விடுவிப்பதற்கான இலங்கையின் முயற்சிகளும் பாதிக்கப் பட்டுள்ளன. அவர்கள் தங்கள் நாட்டின் விதிமுறைகளுக்கு ஏற்பவே படையணிகளில் சேர்க்கப்பட்டார்கள் என ரஷ்யா வலியுறுத்துவதே இதற்குக் காரணம்.

தன்னுடைய படையணியில் இணைந்து கொண்டவேளை இலங்கையர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள னர். அதனை அவர்கள் மதிக்க வேண்டும் என ரஷ்யா வலியுறுத்துகின்றது.

(அ)

# இன்று கூடும் பாராளுமன்றம்



கொழும்பு, ஜூன் 18

இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இன்று காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் காலை 9.30 முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, காலை 10.30 முதல் 5.00 மணி வரை சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டுள்ள ஐந்து கட்டளைகள், உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள், காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் விளையாட்டில் ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் மாலை 5.00 மணிமுதல் 5.30 வரை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

மேலும் எதிர்வரும் 19 ஆம் திகதி தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தீர்மானம் மற்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளன.

20 ஆம் திகதி பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மற்றும் யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கைக்குண்டுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 18

கேகாலை, ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிரிவடுன்ன பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்புக்கனை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

ரம்புக்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இத்தாலியில் இலங்கையரை கொல்ல முயற்சி; சட்டவிரோதமாக தங்கிய இலங்கையர் கைது!

ரோம், ஜூன் 18

இத்தாலியில் இலங்கையர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்த சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தாலியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 41 வயதுடைய இலங்கையர் மற்றுமொரு இலங்கையரை பல முறை கத்தியால் குத்தி பலத்த காயங்களை ஏற்படுத்தியுள்ளதாக இத்தாலியின் கராபினியேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை ஒருவர் காயமடைந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

இதன்போது, 44 வயதுடைய இலங்கை பிரஜை ஒருவர் தாக்கப்பட்டு கழுத்து, மார்பு மற்றும் வலது தொடையில் பலத்த காயங்களுடன் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவரை பொலிஸார் பெல்லெக்ரினி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அவர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இத்தாலியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 41 வயதான இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# நாடளாவிய ரீதியில் சிறப்பாக நடைபெற்றது ஹஜ் பெருநாள்!

கொழும்பு, ஜூன் 18

நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களில் ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகை நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

காத்தான்குடி - காத்தான்குடி மாவட்டத்தின் பிரதான பெருநாள் தொழுகை நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. அதில், சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

அஷ்ஷெய்க் எம்.ஏ.எம் . சிறார் பலாஹி பெருநாள் தொழுகையையும் குத்பாவையும் நடத்தினார். பெருநாள் குத்பாவை யொட்டி பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர்.

மன்னார் - மன்னார் மாவட்டத்திலும் மூர் வீதி ஜ/ம்மா பள்ளிவாசலில் ஹஜ் பெருநாள் நிகழ்வுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை நடைபெற்றது. இவ் தொழுகை மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம்.அஸீம் தலைமையில் நடைபெற்றது.

புத்தளம் - புத்தளம் மாவட்டத்தில் நோன்புப் பெருநாள் தொழுகை புத்தளம் கருப்புத் தரவை மைதானத்தில் நடைபெற்றது. குறித்த பெருநாள் தொழுகை இமாம் மின்ஹாஜ்ஜினால் நிகழ்த்தப்பட்டது.

மூதூர் - மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் ஹஜ் பெருநாள் தொழுகை காலை 6.30 மணிக்கு நடைபெற்றது. தொழுகையினை ஆர்.இமாம் மௌலவி நிகழ்த்தினார்.

ஹஜ் பெருநாள் தொழுகையினை மூதூர் -அல்ஹசனாஹ் சமூக அபிவிருத்தி மையம் ஏற்பாடு செய்திருந்தது.

கிண்ணியா - கிண்ணியா குறிஞ்சாக்கேனி வீசி மைதானத்தில் ஹஜ் பெருநாள் திடல் தொழுகை நடைபெற்றது.

இதில் பெரும்பாலானவர்கள் தொழுகையில் கலந்து கொண்டதுடன் குத்பா பிரசங்கமும் நடைபெற்றது. இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கோறளைப்பற்று - கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை அல் ஹம்றா வித்தியாலய மைதானத்தில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நடைபெற்றது.

பெருநாள் தொழுகையையும், பெருநாள் உரையையும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும், மார்க்க அறிஞருமான அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மத் காஸிமி நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா - வவுனியா தவ்ஹீத் ஜும்மா பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ் பெருநாள் திடல் தொழுகை பட்டாணிச்சூர் 5ஆம் ஒழுங்கை குடா வயல் திடலில் நடைபெற்றது.

முஸ்லிம்களின் தியாகத் திருநாளான புனித ஹஜ் பெருநாள் நாடு பூராகவும் வவுனியா தவ்ஹீத் ஜும்மா பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ் பெருநாள் திடல் தொழுகை மௌளவி அஷ்ஷெய்க் ஏ.அறபாத் (பக்ரி) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கல்முனை - கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் புனித ஹஜ் பெருநாள் நபிவழித் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் நடைபெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அஷ்-ஷேய்க் ஆஷிக் இஸ்மாயில் (ஸலபி) நிகழ்த்தினார்.

ஆயிரக்கணக்கான மக்கள் இப்புனித ஹஜ் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டதுடன் பலஸ்தீன காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

அம்பாறை - அம்பாறை மாவட்டம் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் நடைபெற்றது.

இதன்போது, மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் இஸ்லாமிய அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எம்.எல்.எம். முபாறக் மதனி தொழுகை நடத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார். இதில் ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர்.(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுப் பாதை திறப்பதில் தீர்க்கமான தீர்வு வேண்டும்

## இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை

உகந்தை, ஜூன் 18

**கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை திறப்பதில் தீர்க்கமான தீர்வு தரவேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கிழக்கிலுள்ள இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.**



திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இந்து, சமூக அமைப்புகள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன.

அத்தோடு, நாட்குறைப்பு தொடர்பில் தமது கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன. இதேவேளை, யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் முருகன் கோவில் வரை பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ள குழுவினரும் காட்டுப் பாதை திறப்பதில் பாரபட்சம், பாகுபாடு இல்லாமல் பத்து நாட்களுக்கு முன்னரே திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை ஆலையடி வேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதி மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட பலருக்கும் மகஜர் கையளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

குறித்த தீர்மானம் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து மேற்கொண்ட சந்திப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் ஆலயத்தின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஆலயம் நோக்கிய பாதயாத்திரையை மக்கள் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி லாகுகல பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள உகந்தை காட்டுப் பாதை பக்தர்களுக்காக திறக்கப்பட்டு, ஜூலை 11 ஆம் திகதி மூடப்படுவதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் (07. 06. 2024) அன்று உகந்தை முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, கதிர்காமம் ஆலயத்தில் கடந்த 12ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் உகந்தை காட்டுப் பாதை திறக்கும் திகதி பிற்போடப்பட்டு, எதிர்வரும் ஜூலை மாதம் 02ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு, 14 ஆம் திகதி மூடப்படவுள்ளதாக மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்நாயக்க அறிவித்திருக்கிறார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி, 30ஆம் திகதியை கருத்தில் கொண்டு பக்தர்கள் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட நிலையில், இந்தத் திகதி மாற்றமானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக சமூக அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

காட்டு வழியாக பாத யாத்திரை மேற்கொள்ள தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய கால எல்லை போதாமல் உள்ளதாகவும் பல சமூக அமைப்பினர் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் கதிர்காமம் காட்டுப் பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்தும் குறித்த தீர்மானத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியுமே இன்று மகஜர் கையளிக்க நேற்று நடந்த கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)



புனித ஹஜ் பெருநாள் தொழுகை நற்பிட்டிமுனை மர்ஹூம் எம். எச். எம். அஸ்ரப் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம் பெற்றது.

# பாரதி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு




மூதூர், ஜூன் 18

திருகோணமலை மூதூர் பாரதி மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களில் வசதி குறைந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள்


இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் பு. ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெற்றது.

"ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது பல கஷ்ரப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக கற்றல் உபகரணங்களை வழங்கி வருகிறது.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி, இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான,

சி. காந்தன், லோ. கஜரூபன், எஸ். சுரேஸ், மா. ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)



புனித ஹஜ் பெருநாள் தொழுகை காத்தான்குடி கடற்கரையில் இடம்பெற்றது. தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அஷ்ஷெய்க் ஹாலிதீன் ஹாபிழ் நடத்தினார்.

# புனித ஹஜ் பெருநாள் தொழுகை, பிரசங்கம்


கல்முனை, ஜூன் 18

புனித ஹஜ் பெருநாள் தொழுகையும் பிரசங்கமும் கல்முனை ஹூதா திடலில் இடம் பெற்றது.

முஹம்மதிய்யா ஜூம்ஆ பள்ளிவாசல் மற்றும் ஹூதா ஜூம்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் தொழுகையும் பிரசங்கமும் இடம்பெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் அஷ்- ஷேக் ஆஷிக் இஸ்மாயில் (ஸலபி) நிகழ்த்தினார். (எ)





# கிரிக்கெட் சம்பியன் தொடர் ஆரம்பம்




கல்முனை, ஜூன் 18

கல்முனை டொல்பின் விளையாட்டுக் கழகத்தின் 40 ஆவது வருட கிரிக்கெட் சம்பியன் தொடர் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரியில் அதிகளவான பழைய மாணவர்களைக் கொண்டமைந்ததும், கல்லூரியின் இணைப்பாட விதான செயல்பாடுகளுக்கு உதவிக்கரம் கோர்க்கின்ற கல்முனை டொல்பின் விளையாட்டுக் கழகத்தின் 40 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு கிரிக்





கெட் சம்பியன் கிண்ணத் தொடரானது கல்லூரி அதிபரும், குறித்த கழகத்தின் போசகருமான அருட் சகோதரர் எஸ். ஈ. றினோல்ட்டால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில்கள் மோதி விபத்து 15 பேர் பரிதாபமாக பலி!

கொல்கத்தா, ஜூன் 18

இந்தியாவின் மேற்குவங்கத்தில் கஞ்சன்சங்கா எக்ஸ்பிரஸ் ரயில் மீது சரக்கு ரயில் மோதிய தால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்தது. 60 பேர் படுகாயங்களுடன் மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.



இந்த விபத்தில் பலர் படுகாயமடைந்ததால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. விபத்துப் பகுதியில் மீட்புப் பணிகளை முடுக்கிவிட முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

மேற்குவங்க மாநிலம் நியூ ஜல்பைகுரி மாவட்டத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயில் மீது சரக்கு ரயில் மோதியது. இந்த ரயில் அசாமின் சில்சாரில் இருந்து மேற்குவங்கத்தின் சேல்டா மாவட்டம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. அப்போது நியூ ஜல்பைகுரியில் விபத்து நிகழ்ந்தது. பின்னால் இருந்து சரக்கு ரயில் மோதியதில் கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயிலின் பல பெட்டிகள் சேதமடைந்தன.

(எ)

# அரிய வகை நோய் பரவல் 2 நாளில் மரணம் நிச்சயம்

டோக்கியோ, ஜூன் 18

ஜப்பானில் கடந்த சில நாட்களாக அரிய வகை நோய் விரைவாக பரவி வருகிறது. கடந்த 2 ஆம் திகதி இந்த மர்ம நோய் தாக்கம் வெளியுலகிற்கு தெரியவந்தது.

இந்த நோய் தொற்றால் இதுவரை 977 பேருக்கு பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 941 ஆக இருந்தது.

இந்த நோயானது, உடல் பகுதியை உண்ணக் கூடிய பக்ரீயாவால் ஏற்பட கூடியது. மனிதர்களை 48 மணிநேரத்தில் கொல்லும் சக்தி படைத்தது.


இதன் பாதிப்பால், வீக்கம் மற்றும் தொண்டையில் வலி ஏற்படும். சில பேருக்கு, காலில் வலி, வீக்கம், காய்ச்சல் மற்றும் குறைந்த இரத்த அழுத்தம் உள்ளிட்ட அறிகுறிகள் விரைவாக ஏற்படும்.

இதன்பின்னர், சுவாச பாதிப்பு, உடல் உறுப்புகள் செயலிழப்பு மற்றும் மரணம் நிகழும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து டோக்கியோ மகளிர் மருத்துவ பல்கலைக் கழகத்தின் தொற்று நோய்களுக்கான பேராசிரியர் கென் கிகுசி தெரிவிக்கையில், பெருமளவில் 48 மணிநேரத்தில் உயிரிழப்பு ஏற்பட்டு விடும்.

வேகமாக பரவி வரும் தொற்று நோய்களால், நடப்பு ஆண்டில் பாதிப்பு எண்ணிக்கை 2,500 ஆக அதிகரிக்கக் கூடும். 30 சதவீதம் இறப்பு ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(எ)



# சிங்கப்பூரில் கறுப்பாக காட்சியளிக்கும் கடற்கரை

சிங்கப்பூர், ஜூன் 18

சிங்கப்பூரின் சென்டோசா தீவு கடற்பகுதியில் மரைன் ஹானர் என்ற சரக்கு கப்பல் நின்று கொண்டிருந்தது. இது சிங்கப்பூரின் எரிபொருள் விநியோக கப்பலாகும். இந்த நிலையில் நெதர்லாந்து நாட்டின் வோக்ஸ் மாக்சிமா என்ற தூர்வாரும் கப்பல் (டிரெட்ஜர்) அந்த வழியாக சென்றது. அப்போது நின்று கொண்டிருந்த சரக்கு கப்பல் மீது நெதர்லாந்து கப்பல் மோதியது. இதில் அந்த கப்பலின் எண்ணெய் தாங்கி சேதமடைந்தது.

சேதமடைந்த பகுதி வழியாக எண்ணெய் வெளியேறி கடலில் பரவியது. இதனால் பிரபல சுற்றுலாத் தலமான சென்டோசா கடற்கரை எண்ணெய் படலமாக காட்சியளிக்கிறது. இதனால் அங்கு ஏராளமான மீன்கள் செத்து மிதந்தன. எனவே அந்த எண்ணெய் படலங்களை அகற்றும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து நடந்துள்ளது.

எண்ணெய் தாங்கியில் ஏற்பட்ட உடைப்பு விரைவில் சரிசெய்யப் பட்டு, எண்ணெய் கசிவு கட்டுப் படுத்தப்பட்டது. எனினும், கடலில் கலந்த எண் ணெய் படலம் அலைகளால் கரையோரத்துக்கு அடித்து வரப்படுகின்றன. இதனால் சென்டோசா கடற்கரையில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் படலத்தை அகற்றி கடற்கரைகளை சுத்தம் செய்யும் பணியில் சுமார் 250 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். எண்ணெய் மேலும் கடற்கரைகளில் பரவாமல் தடுப்பதற்காக 1. 5 கிலோ மீற்றர் நீளத்துக்கு மிதவை தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 1. 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு தற்காலிக தடைகள் அமைக்கப்படவுள்ளதாக சிங்கப்பூர் கடல்சார் மற்றும் துறைமுக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதவிர, அருகிலுள்ள பூங்காவில் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக தேசிய பூங்கா வாரியம் சார்பில் எண்ணெய் உறிஞ்சும் மிதவைகள் பயன்படுத்தப்பட்டன.

எண்ணெய் கசிவால் கடற்பரப்பில் ஏற்பட்ட சேதம் மற்றும் வனவிலங்குகள் பாதிப்பை இயற்கை பாதுகாவலர்கள் மற்றும் உயிரியலாளர்கள் கண்காணித்து வருகின்றனர்.




# மெக்காவில் வெப்ப தாக்கத்தால் ஹஜ் யாத்திரிகர்கள் 20 பேர் மரணம்

ரியாத், ஜூன் 18

மெக்காவில் வெப்ப தாக்கத்தால் ஹஜ் யாத்திரிகர்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

சவுதி அரேபியாவில் வெப்ப அலையால், ஜோர்தானை சேர்ந்த 15 யாத்ரீகர்கள் மற்றும் ஈரானை சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர்.



சவுதி அரேபியாவின் மெக்கா நகருக்கு உலகம் முழுவதும் இருந்து மக்கள் ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர். நடப்பு ஆண்டில் 18 இலட்சம் யாத்திரிகர்கள் சவுதிக்கு பயணம் மேற்கொள்வார்கள் என அந்த நாட்டுக்கான புள்ளியியல் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், இந்த ஆண்டில் சவுதி அரேபியாவில் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. மெக்காவில் 48 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகியுள்ளது.

வெப்ப தாக்கத்தை எதிர் கொள்ள கூடிய வகையிலான மருத்துவ குழுவினர் உட்பட 1,600 இராணுவத்தினரை சவுதி இராணுவம் அனுப்பியுள்ளது.

இதேபோன்று, 30 அதிரடி விரைவு குழுவினரும், 5 ஆயிரம் சுகாதார மற்றும் முதலுதவி தன்னார்வலர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# மலாவி துணை ஜனாதிபதியின் இறுதி ஊர்வலத்தில் விபத்து

## கர்ப்பவதி உட்பட நால்வர் மரணம்

லிலாங்வே, ஜூன் 18

மலாவி துணை ஜனாதிபதியின் இறுதி ஊர்வலத்துக்குள் திடீரென நுழைந்த வாகனத்தால் கர்ப்பவதி உட்பட நால்வர் உயிரிழந்தனர்.



சில இடங்களில் திரண்டிருந்த மக்கள், துணை ஜனாதிபதியின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஊர்வலத்தை நிறுத்தும்படி கூறியதால் பதற்றம் உருவானது.

மலாவியின் துணை ஜனாதிபதி சவுலோஸ் சிலிமா, கடந்த வாரம் விமான விபத்தில் உயிரிழந்தார். அவரது உடல், நிட்செயு மாவட்டத்திலுள்ள அவரது சொந்த ஊரான நிசிபி கிராமத்துக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. அவரது உடலை பார்த்து இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அவரது கட்சியினர் மற்றும் பொதுமக்கள் திரண்டிருந்தனர். நேற்று அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக, துணை ஜனாதிபதியின் உடலை சொந்த ஊருக்குக் கொண்டு செல்லும் வழியில், ஊர்வலத்தில் பங்கேற்ற ஒரு வாகனம் திடீரென மக்கள் கூட்டத்துக்குள் நுழைந்தது. இந்த விபத்தில், கர்ப்பவதி உட்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர். (எ)

# குண்டுவெடிப்பில் இராணுவத் தளபதி உட்பட 8 பேர் பலி!

மொகாதிசு, ஜூன் 18

பயங்கரவாதிகளின் வெடிகுண்டு தாக்குதலில் சிக்கிய இராணுவத் தளபதி உட்பட 8 பேர் பலியாகினர்.

சோமாலியாவின் தென் மேற்கு பகுதியிலுள்ள பைடோவா நகரிலிருந்து பெர்டேல் நகருக்கு இராணுவத்தினர் வாகனங்களில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களது வாகனத்தை குறிவைத்து வீதியில் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டை பயங்கரவாதிகள் வெடிக்கச் செய்தனர். இதனால் ஒரு வாகனம் வெடித்து சிதறியது.

இந்தத் தாக்குதலில் இராணுவத் தளபதி முகமது தேரே உட்பட 8 பேர் பலியாகினர். மேலும் 11 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு அல் கொய்தாவுடன் தொடர்புடைய அல் - ஷபாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2500 பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜூலை முதல் வாரம் நியமனம்!

## கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 18

**கணிதம், இரசாயனவியல், பௌதீகம், உயிரியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு மொழிகளிலும் சுமார் 2500 பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

நாத்தாண்டிய தம்மிஸ்ஸர வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்று மாடி தொழில்நுட்ப கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதன்படி முதற்கட்டமாக ஒகஸ்ட் -செப்ரெம்பர் மாதத்திற்குள் 2500 அதிநவீன ஸ்மார்ட் வகுப்பறைகள் அனைத்து முன்னணி பாடசாலைகளுக்கும் வழங்கப்படும்.

அத்துடன் மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்து பாடசாலைகளும் டிஜிற்றல் மயமாக்கப்படும்.

மேலும் ஆசிரியர்கள் இதற்குத் தயாராக வேண்டும். ஆசிரியர் பயிற்சி தொடர்பான ஆசிரியர் கையேடு நிபுணர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆரம்பச் சுற்றில் 7500 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படும் - என்றார். (அ)

# இந்த வருடத்தின் இறுதிக்குள் குற்றச் செயல்கள் குறையும்!

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 18

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையினால் நாட்டில் குற்றச்செயல்கள் 23 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்களை அவர்களது குடும்பங்களுடன் ஒன்றிணைக்கும் நிகழ்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து குற்றச்செயல்கள் 23 வீதம் குறைவதற்கு வழிவகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், இவ்வருட இறுதிக்குள் குற்றச் செயல்கள் 50 வீதமாக குறையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்தோடு, ஆறு மாதங்களுக்குள் விசேட நடவடிக்கையின் மூலம் 5,000 போதைப் பொருள் வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போதைப் பொருள் வலையமைப்பில் 90 வீதத்துக்கும் அதிகமானவற்றை அழித்துவிட்டதாகவும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கூறினார். (அ)

# போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 18

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மிலானோ வகையான சிகரட், ஹேஸ் வகையான போதைப்பொருள் மற்றும் கஞ்சா ஆகியவற்றுடன் நபர் ஒருவர் கைது செய்துள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் 35 வயதுடைய எத்பட்டிய பிபிலேகம பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹிங்குருகடுவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய ஹிங்குருகடுவ பொலிஸ் குழு ஒன்று எத்பட்டிய பகுதிக்கு சென்று சந்தேகத்துக்கு இடமான வீட்டைச் சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்டபோது சிகரட் உட்பட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிலானோ வகையான சிகரட் 240 , 15 கிராம் கஞ்சா, 5 மில்லி கிராம் ஹேஸ் ரக போதைப்பொருள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நிதி திரட்டிச் சுகபோகமாக வாழவே வெளிநாடுகளுக்கு செல்கிறார் அநுர!

## சந்திம வீரக்கொடி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 18

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, கட்சியின் நிதி இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்காகவே வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கட்சியின் நிதி இருப்பினை தக்கவைத்துக்கொள்வதற் காகவே வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றார்.

அங்கு சென்று இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடுவதில்லை. மாறாக நாட்டின் கல்வித்துறை சுகாதாரத்துறை அல்லது நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதில்லை.

வெளிநாடுகளுக்கு சென்று அங்கு நிதியினை திரட்டி உள்நாட்டில் சுகபோகமாக வாழ்வதற்காகவே அவர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கிறார்.

இந்த நாட்டை வழிநடத்துவதற்கான சிறந்தலைவர் யார் என்பதில் வெளிநாடு வாழ் இலங்கையர்களும் சிந்தித்து செயல்பட வேண்டும். இவ்வாறான அரசியல் சூழ்ச்சிதாரர்களின் சதித்திட்டங்களுக்கு வெளிநாடு வாழ் இலங்கையர்கள் ஒத்துழைப்பு வழங்ககூடாது-என்றார். (அ)

# 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.3 வீதம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

கொழும்பு, ஜூன் 18

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கைப் பொருளாதாரம் 5.3% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன், கைத்தொழில் துறையும் 11.8% வளர்ச்சியைப் பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

2022 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் 12 வீதத்துக்கும் குறைவான எதிர்மறையான பொருளாதாரத்தை கொண்ட ஒரு நாடாக பதிவான இந் நாட்டின், இந்த நிலைமையை நேர்மறையான கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்கள் இலங்கையின் பொருளாதார பயணத்தை நம்பிக்கையுடன் பார்க்கமுடியும்.

உலக வங்கியின் கணிப்புகளின்படி, இலங்கையின் பொருளாதாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் 2.2 வீத வளர்ச்சியடையும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரம் குறைந்த (மைனஸ்) 7 க்கு மேல் இருந்ததாக தெரிவிக்கப்பட்ட ஒரு நாட்டில், இரண்டு வருடங்களில் 2% க்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்தமை மிகவும் நல்ல சாதனை.

இலங்கை பின்பற்றும் வேலைத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்தினால் தெளிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அவதானமாக முனநோக்கிச் செல்ல வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்-என்றார். (அ)

# "1700 ரூபாவை வழங்காவிட்டால் அது தண்டனைக்குரிய குற்றம்!"

கொழும்பு, ஜூன் 18

தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனமாக 1700 ரூபா வர்த்தமானி ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சம்பள நிர்ணய சபையின் ஒரு தீர்மானமாக இந்த 1700 ரூபா அமைந்திருக்கின்றது. எனவே இது ஒரு சட்ட ரீதியான செயற்பாடு என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தோட்ட கம்பனிகள் தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனமான 1700 ரூபாவை வழங்காவிட்டால் அல்லது வழங்க முடியாவிட்டால் , வழங்காமல் அவர்கள் இதனை உதாசீனம் செய்தால் அவர்கள் தண்டனைக்குரிய குற்றவாளிகளாக கருதப்படுவார்கள்.

அது மாத்திரமல்ல 1992 ஆம் ஆண்டு தோட்டங்கள் அதனை நடத்துவதற்காக அரசாங்கத்தினால் இவ்வாறு தனியார் கம்பனிகளுக்கு பாரம் கொடுக்கப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை நட்டம் என்ற வார்த்தையை தான் சொல்லி கொண்டு வருகின்றனவே ஒழிய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தோட்டங்கள் இலாபம் அடைந்ததாக அவர்கள் சொல்லவில்லை.

அப்படி என்றால் எந்த ஒரு நிறுவனமும் 32 வருடங்கள் தொடர்ச்சியாக நட்டம் என்றால் அவர்களால் அந்த வியாபாரத்தை தொடர்ச்சியாக முன் கொண்டு செல்ல முடியுமா ? முடியாது. ஆகவே இதிலிருந்து தெரிகின்றது தோட்டக் கம்பனிகள் நட்டம் என்று போலியான அந்த விடயத்தை தான் முன் வைக்கின்றார்களே ஒழிய எந்த ஒரு இடத்திலும் இலாபம் என்று சொல்லவில்லை.

அந்த வகையில் தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனமான 1700 ரூபாவை அவர்கள் வழங்கியே ஆகவேண்டும். அவ்வாறு வழங்காவிட்டால் தண்டனைக்குரிய குற்றமாக அது அமையும். ஏதோ ஒரு காரணத்துக்காக அதை வழங்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டால் அவர்கள் தோட்டங்களை மீண்டும் அரசாங்கத்திடம் கொடுத்து விட்டு வீட்டை நோக்கிச் செல்லவேண்டி வரும்-என்றார்.

# சொத்து வரியில் திருத்தம்!

கொழும்பு, ஜூன் 18

2025 ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் சொத்து வரியை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்மொழிந்துள்ளதாக பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஆண்டின் சித்திரை மாதப்பகுதிக்குள் முழுமொத்தமாக நாட்டில் சொத்து வரியை அமுல்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்திருக்க வேண்டும்.

எனினும் அவ்வாறு செய்ய முடியாத காரணத்தினால், அறவிடப்படும் வட்டகை வரு[illegible] திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் திட்டத்தை பெரமுன முன்வைக்கவேண்டும்!

## வலியுறுத்துகிறார் அமைச்சர் பந்துல

கொழும்பு, ஜூன் 18

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கும் வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவேன். நாணய நிதியத்தின் செயற்திட்டங்களை தொடராமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் திட்டத்தை பொதுஜன பெரமுன முன்வைக்க வேண்டும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மஹரக பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி அடுத்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும். இந்த ஆண்டு புதிதாக எவ்வித வரிகளும் அமுல்படுத்தப்படமாட்டாது. அத்துடன் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வரிகளும் மாற்றியமைக்கப்படமாட்டாது.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டங்களை எமது ஆட்சியில் மறுசீரமைப்போம் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது மேடை பேச்சுக்கு மாத்திரம் வரையறுக்கப்படும். நடைமுறைக்கு அது சாத்தியமாகாது. பெட்டிக்கடையை நிர்வகித்தவர்களால் நாட்டை நிர்வகிக்க முடியாது.

நாட்டு மக்களை தவறாக வழிநடத்தி ஆட்சிக்கு வரும் அரசாங்கம் வெகு நாட்களுக்கு ஆட்சியில் இருக்காது. எவர் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்துடன் தான் நாட்டை நிர்வகிக்க வேண்டும். இதுவே யதார்த்தம்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கவை. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கும் வேட்பாளருக்கு முழுமையான ஆதரவு வழங்குவேன். பொருளாதார விவகாரத்தில் நாட்டு மக்களிடம் இனியும் பொய்யுரைக்க வேண்டிய தேவை கிடையாது. போலியான அரசியல் வாக்குறுதிகளினால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்பதை அனைத்து அரசியல் கட்சிகளும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியும். அரசாங்கம் மாற்றமடையும் போது பொருளாதார கொள்கைகளை மாற்றியமைக்கும் நிலை மாற்றமடைய வேண்டும்.

பொதுஜன பெரமுன எவ்வாறான நிலைப்பாட்டில் செயற்படுகிறது என்பதை நான் அறியவில்லை. 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்கவை சிறந்த தீர்வாக தெரிவு செய்ய முடியும் என்றால் ஏன் அந்த தீர்மானத்தை இந்த ஆண்டும் எடுக்க முடியாது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் திட்டம் பொதுஜன பெரமுனவிடம் இருந்தால் தாராளமாக முன்வைக்கலாம் - என்றார். (அ)

# இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்தில் சரிவு

## டொலர் வெளியேறுகின்றமை காரணம் என்கிறார் பேராசிரியர்

கொழும்பு, ஜூன் 18

இலங்கைத்தீவின் ஏற்றுமதி பொருளாதாரமானது கணிசமான அளவு குறைவடைந்து வருகிறது. அவ்வாறு ஏற்றுமதி பொருளாதாரமின்றி வளர்ந்து வரும் முதன்மையான நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்றாகக் காணப்படு கின்றது.

ஏற்றுமதி பொருளாதாரம் மூலம் இலங்கைக்கு வரவழைக்கப்படும் டொலரை விட இறக்குமதிக்காக செலவிடப்படும் டொலரின் அளவு அதிகமாக உள்ளதாக கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் துறை பேராசிரியர் அமிர்தலிங்கம் உறுதிப்படுத்தினார்.

டொலர் அதிகளவில் வெளியேறுகின்றமை இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரம் சரிவடைவதற்குப் பிரதான காரணம் என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றின் பொருளாதார நல்வாழ்வைப் பேணுவது மிகவும் முக்கியமானது" என பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள பிபிசி சிங்களச் சேவைக்குத் தெரிவித்திருந்தார்.

புலம்பெயர் இலங்கை தொழிலாளர்களின் பணத்தை அனுப்புவதில் இலங்கை பல சவால்களை எதிர்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள பல நாடுகள் வருடாந்தம் அனுப்பும் பணத்தை இரட்டிப்பாக்க முடிந்தாலும், இலங்கை குறைந்த மட்டத்தில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

"2010ஆம் ஆண்டு இலங்கைக்கு புலம்பெயர் இலங்கை தொழிலாளர்கள் மூலம் அனுப்பப்பட்ட போது சுமார் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது 2015ஆம் ஆண்டு 6.9 பில்லிய னாக அதிகரித்தது.

பின்னர் 2016ஆம் ஆண்டு அண்மைய வரலாற்றில் அதிகப் பணம் அனுப்பப்பட்டது.

அதன் பின்னர் 2021ஆம் ஆண்டளவில் இது 3.8 பில்லியனாக குறையும், எங்களால் தொகையை அதிகரிக்க முடியவில்லை" என்று பேராசிரியர் வசந்த அத்துக்கோரள விளக்கினார்.

புலம்பெயர் இலங்கை தொழிலாளர்களின் பணம் இலங்கைக்கு அனுப்புவதைக் குறைக்கும் சவால்கள் சிலவற்றையும் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டினார். (அ)

### ஐ.எம்.எவ்வின்...

உடன்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறான எதுவும் நடக்கவில்லை.

கொழும்பு பாடசாலை ஒன்றுக்கு ஸ்மார்ட் வகுப்பறை திட்டத்தை கையளிக்கும் நிகழ்வில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எமது நாட்டின் இறையாண்மையை நாங்கள் யாருக்கும் விற்கவில்லை. நல்ல நிலையிலிருந்து, நல்லதொரு கலந்துரையாடலுக்கு சென்றால் மக்கள் தரப்பில் செய்ய வேண்டியதைச் சரியாக செயல்படுத்த முடியும்.

மக்களின் அழுத்தத்தைக் குறைத்து, மக்களின் அசௌகரியங்களைக் குறைப்பதன் மூலம், ஒடுக்குமுறையான மக்கள் வாழ்க்கையை உருவாக்காமல் நல்ல ஆக்கப்பூர்வமான உடன்பாட்டை எட்ட முடியும். என்றாலும், இன்று பொம்மை அரசாங்கமே காணப்படுகிறது. இது இந்த யுகத்தின் அவலம்.

எமது நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு தேவை. வங்குரோத்தான கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் செயல்பட்டால், எமது நாடு இன்னுமொரு பாதாளத்தில் விழும். நாட்டுக்குப் பெற முடியுமான சிறந்ததை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

### தமிழ்...

தொடர்பான கலந்துரையாடல்களை நடத்த முடியும் என்றும் அவர் இதன் போது கூறினார்.

ஆரையம்பதி பொதுச்சந்தையில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் கொண்ட கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ஐ)

### பிறப்புவீதம்...

எண்ணிக்கை 3 இலட்சத்து 25 ஆயிரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 47 ஆயிரமாக குறைவடைந்துள்ளது.

இதேநேரம் 2017ஆம் ஆண்டில் வருடாந்த இறப்பு எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரமாக காணப்பட்ட நிலையில், 2023ஆம் ஆண்டில் ஒரு இலட் சத்து 80 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

கடந்த 5 வருடங்களாக மகளிர் மற்றும் மகப்பேற்றியல் மருத்துவ நிபுணர்கள் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்தது.

இந்த நிலைமை எதிர்காலத்தில் நாட்டின் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படவும் - பொருளாதாரம் பாதிக்கப்படும் வழிவகும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (ஐ)

### இந்திய...

சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் சிறீகந்தவேள் புனிதபிரகாஸ் தெரிவித்தவை வருமாறு,

இந்திய இழுவைமடி படகுகளின் அத்துமீறல் எமது கடல் பகுதிகளில் அரங்கேறி வருகிறது. இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெருமளவு பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இதனால் நாளை (இன்று) செவ்வாய்க் கிழமை முற்பகல் மணிக்கு 10 மணிக்கு இந்திய துணைத் தூதரகத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தவுள்ளோம்.

ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர், துறைசார்ந்த திணைக்களங்கள் விரைந்து செயல்பட்டு இந்திய இழுவை மடி படகுகளை கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் பாராளுமன்றத்தை முற்றுகையிட எமது அமைப்புகள் திட்டமிட்டுள்ளன - என்றார். (ஐ-01)

### மன்னார்...

தகவல் வெளியானது.

மன்னார் வளை குடாவில் குவிந்துள்ள பிளாஸ்ரிக் கழிவுகளில் 74 சதவீதத்துக்கும் அதிகமானவை கழித்துவிடப்பட்ட அல்லது தொலைந்து போன மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்களாகும்.

இவ்வாறு, சுமார் 80 இலட்சம் தொன்னுக்கும் அதிகமான பிளாஸ்ரிக் கழிவுகள் காணப்படுகின்றன. இவற்றில் 50 வீதத்துக்கும் அதிகமானவை இந்திய மீனவர்களால் கைவிடப்பட்டவை. ஏனையவை இலங்கை மற்றும் ஏனைய நாடுகளால் கைவிடப்பட்டவை.

அடையாளம் காணப்பட்ட கழிவுகளில் 41 வீதமானவை இலங்கையின் கரைகளிலும் ஏனையவை தமிழ்நாட் டின் கரையோரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கரையில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து கடற்கரைகளில் பெறப்பட்ட ஒரு கிலோ மண்ணில் 32 முதல் 57 மைக்ரோ பிளாஸ்ரிக் கழிவுகள் காணப்பட்டன என்றும் தெரிய வந்துள்ளது.

இதேநேரம், கைவிடப்படுகின்ற கழிவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளிலும் இது வரையில் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றும் அந்த ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம், பிளாஸ்ரிக் கழிவுகளால் மன்னார் வளைகுடா பரப்பில் முருகைக் கற்பாறைகள் மற்றும் அந்தப் பகுதியின் உயிர்பல்வகை தன்மை அழிவை சந்திக்கின்றது என்று அண்மையில் வெளியான மற்றோர் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### புலமைப்பரிசில்...

முறையாக மதிப்பீடு செய்வது ஆசிரியர்களின் பொறுப்பு. பாடசாலை சபை மூலம் இந்த புள்ளி வழங்கல் கண்காணிக்கப்படும்.

புதிய கல்வி மறுசீரமைப்பின்போது தரம் 1, 6, 10 ஆகிய வகுப்புகளை உள்ளடக்கிய கல்வி முன்னோடி திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

### வடக்கில்...

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கடலட்டை குஞ்சு உற்பத்திக்கு அனுமதிக்கப்பட்டிருந்த சீன நிறுவனமும் வெளியேற்றப் பட்டுள்ளது. தற்போது, 100 வீதம் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்தவர்களே ஈடுபடு கிறார்கள். எமது மக்களே எமது பிர தேசங்களின் வளங்களைப் பயன்படுத்தி உச்ச பயன்களைப் பெறவேண்டும் - என்றும் அவர் கூறியிருந்தார். (ஐ)

### வடக்கில்...

மதுபானத்துக்கான கதவை திறக்கி றது. இந்தத் தூரம் நியாயமற்றது என்று லயன் பிரேவெறி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கூறியுள்ளார்.

அத்துடன், வடக்கில் அண்மையில் வழங்கப்பட்ட மதுபான உரிம பத்திரங்கள் சட்டபூர்வ தயாரிப்புகளின் விற்பனையை மேம்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

### மக்களோடு...

அலகுகளிலிருந்து கொழும்பு துறைமுக நகரம் வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டங்கள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்படும். அதற்கு தேவையான தலைமைத்துவம் எம்மிடம் உள்ளதோடு அவற்றை செயல்படுத்துதற்கான நல்ல தலைவர்களும் உள்ளனர்.

இலங்கை அரசியலால் மக்கள் குழப்பத்தில் உள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் ஒரு கட்சியில் இருக்கும்போது அதனை விசாரித்தவர்களும் அதே கட்சியில் உள்ளனர். இதனால் மக்க ளோடு நாமும் குழப்பத்தில் உள்ளோம்" என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கட்சி தாவல்களினால் தெற்கு சூடு பிடிக்கும்?

## இதற்கான பேச்சுகள் மும்முரம்

கொழும்பு, ஜூன் 18

**தெற்கு அரசியலில் வெகுவிரைவில் ஏட்டிக்குப்போட்டியாக கட்சி தாவல்கள் சூடுபிடிக்கும் என சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**இதற்கான பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும், கட்சி தாவும் காலப்பகுதி பற்றி ஆராயப்பட்டுவருகின்றது எனவும் தெரிய வருகின்றது.**

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகே தாவல்கள் பெருமளவில் இடம்பெறக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அரசுடன் இணையவுள்ளனர்.

அதேபோல ஆளுங்கட்சி பக்கம் உள்ள 15 பாராளுமன்ற உறுப்பினர் கள் வரை ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கவுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

அத்துடன், சர்வஜன அதிகாரம் பக்கமும் சில எம்.பிக்கள் செல்ல வுள்ளனர். மேலும் சிலர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

எனவே, கட்சி தாவல்கள் களை கட்டும் எனவும் சுமார் 40 வரை யான எம்.பிக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை மாற்ற திட்டமிட் டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

## அடுத்த 5 ஆண்டுகளே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்!

### மன்னாரில் குறிப்பிட்டார் ரணில்

கொழும்பு, ஜூன் 18



அடுத்த ஐந்து வருடங் களில் செயற்படுத்தப்படும் பொருளாதாரக் கொள்கை களே இலங்கையின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இளை யோர் மற்றும் வர்த்தகர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

"சுபீட்சமான எதிர்காலத்திற்கான பயணம்" என்ற பெயரில் இளைஞர் அமைப்பு ஏற்பாடு ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற் றது. இங்கு, 2023/2024 உயர்தரப் பரீட்சைக்கு தெரி வான மாணவர்களுக்கு ஜனாதிபதியால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு வட மாகாண கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

இதன்போது இளைஞர் மத்தியில் சென்று அவர்க ளின் பிரச்னைகளை கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்க ளின் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கி னார்.

கொவிட் - பொருளாதார நெருக்கடியின் காரணமாக 4 வருடங்களாக தொழில்களை வழங்க முடியாமற் போனதோடு, தொழில் கிடைத்த பலரும் அவற்றை இழந்து நிற்கும் நிலைமையும் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியுள்ளதாக ஜனாதி பதி தெரிவித்தார்.

அதனால் புதிய பாதையில் சென்று தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமா, இல்லாவிட் டால் பழைய முறையில் சென்று வீழ்ச்சியடைவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதனையடுத்து மன்னார் மாவட்ட வர்த்தர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில், அரசாங்கம் முன்மொழிந்திருக் கும் வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிப் பயணிக் கும் பட்சத்தில், எதிர்காலத்தில் பெருமளவான முதலீட் டாளர்கள் நாட்டுக்கு வருகைத் தருவர் என்றும் ஜனாதி பதி சுட்டிக்காட்டினார்.

காலத்துக்குக் காலம் பொருளாதாரக் கொள்கை களை மாற்றிக்கொள்ளாமல், சரியான பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றினால் நாடு முன்னேற்றமடையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்காகவே பொருளாதார மறுசீரமைப்புச் சட்ட மூலத்தைச் சமர்பித்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அதனை எந்தவொரு அரசாங்கமும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்றும் கூறினார்.

நீண்டகாலமாக அரசியல் ரீதியான தீர்வைத் தேடும் இந்நாட்டு மக்கள், ஒருபோதும் பொருளாதாரத்தின் பக்கமாக தீர்வைத் தேடவில்லை என்றும், சரியான பொருளாதாரக் கொள்கையின் ஊடாக மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் சுட்டிக் காட்டினார்.

சரிவடைந்திருந்த பொருளாதாரத்தை குறுகிய காலத்தில் கட்டியெழுப்ப தன்னால் முடிந்ததெனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதாரம் வலுவடையும் போது, அதன் பலன்கள் சகல தரப்பினருக்கும் கிடைக் கும் என்றும் குறிப்பிட்டார். (அ)

## "முல்லைத்தீவில் பறிபோகும் காணிகள் தீவிரமடையும் சிங்கள குடியேற்றங்கள்"

முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகள் அபகரிக்கப்பட்டு தமிழ் குடும்பங்க ளுக்கு காணி இல்லாத நிலையில் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன் றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடமாகாணத்திலே 2415 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்புள்ள மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம். கிட் டத்தட்ட 5 இலட்சத்து 900 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பை கொண்டதாக கணிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 குடும்பங்களுக்கு காணி இல்லை.

ஏற்கனவே புலிகள் மௌனிக்கப்பட்ட காலங்களுக்கு பின்னர் பூர்விகமான மணலாறு என்ற இடம் வெலி ஓயவாக மாற்றம் செய்து 4238 சிங்கள குடும்பங் களுக்கு காணிகள் வழங்கி வீட்டு வசதிகளும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள்.

அரசாங்கம் தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்தே வழங்கியிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 47455 மொத்த குடும் பங்களும், 140, 931 மக்கள் தொகையாக காணப்படுகின் றது. இதில் தமிழர்களுடைய பூர்வீக இடங்களில் 4557 குடியமர்த்தப்பட்ட சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த 12545 பேரும், முஸ்லிம் மக்களாக 1675 குடும்பங்களை சேர்ந்த 6382 பேரும் தமிழ் மக்களாக 41210 குடும்பங்க ளைச் சேர்ந்த 121799 பேரும் காணப்படுகிறார்கள்.

குறிப்பிட்டு கூறக்கூடிய விடயம் என்னவெனில் தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்த பூர்வீகமான நீர்ப்பாசனக் குளங்கள், அதனோடு சேர்ந்த காணிகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டு 4557 குடும்பங்களில் பல குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

இதில் ஆமையன்குளம், முந்திரிகைகுளம், மறிச்சுக் கட்டி குளம் ஆகிய குளங்களையும் அதனோடு இணைந்த நிலப்பரப்புகளையும் அபகரித்தே சிங்கள மக்களுக்கு வழங்கி தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களையும், குளங்களையும் ஏக்கத்தோடு பார்த்து கொண்டிருக்கும் நிலைமையை ஆட்சியாளர்கள் கொக்குத்தொடுவாய் , கொக்குளாய், கருநாட்டுக்கேணி மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளார்கள் - என்றார். (அ)

## ரணில் - அநுர கூட்டு ஒப்பந்தம்!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 18



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவுக்கு இடையிலான கூட்டு ஒப்பந்தம் வெளியாகி யுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப் பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நளின் பண் டார தெரிவித்துள்ளார்.

"தேர்தல் ஒக்ரோபர் மாதம் 05,ஆம் திகதி நடை பெறும் என சுற்றுலாத்துறை மற்றும் காணி விவகாரங் கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அண்மையில் தெரிவித்திருந்தார்.

தற்போது லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஒக்டோபர் மாதம் 05,ஆம் திகதி அங்கு தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து அரசாங்கத்தில் உள்ள ஹரினும், எதிர்க் கட்சியில் உள்ள அனுரவும் ரணில் விக்கிரமசிங்கவின் சீடர்கள் என்பது தெரியவருகிறது" என நளின் பண்டார கூறியுள்ளார்.

இதேவேளை, மியான்மார் மற்றும் ரஷ்யாவில் வாழும் இலங்கையர்களுக்காக உயிருக்காக போராடுப வர்களுக்காக ஒரு நிமிடமேனும் செலவிடாத அனுர குமார திசாநாயக்க லண்டன், பாரிஸ், ரோக்கியோ ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வதாக பாராளு மன்ற உறுப்பினர் வசந்த யாப்பா அபேவர்தன தெரிவித் துள்ளார். (அ)

## மாளிகாவத்தையில் தீப்பரவல்

கொழும்பு, ஜூன் 18

கொழும்பு - மாளிகாவத்தை பகுதியில் அமைந்துள்ள நிகழ்வு மண்டபமொன்றில் நேற்று தீப்பரவல் ஏற்பட் டது.

தீயணைப்புப் படையினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில், எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது.

தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்தின் ஒரு பகுதி மட்டுமே சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டி ருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## உதிரிப்பாகங்கள் பற்றாக்குறை பராமரிப்புப் பணிகளில் தாமதம்

### இதனால் அடிக்கடி ரயில் தடம்புரள்வு

கொழும்பு, ஜூன் 18

ரயில் மார்க்கம் மற்றும் பெட்டிகளின் பராமரிப்புக் குத் தேவையான உதிரிப் பாகங்கள் இல்லாததன் காரண மாக அடிக்கடி ரயில் தடம் புரண்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக கரையோர மற்றும் மலையக மார்க்கம் உள்ளிட்ட பல மார்க்கத்தில் ரயில் தடம் புரண்டது.

இதன் காரணமாக ரயில் போக்குவரத்து இரத்து செய்யப்பட்ட நிலையில் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நேற்று முன் தினம் இரவு கொழும்பு - கோட்டையிலிருந்து கண்டி ஊடாக நானுஓயா வரை பயணித்த திகிரி மெனிக்கே ரயில் தடம் புரண்டது.

இந்த நிலையில், பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் நானுஓயா இரயில் நிலையம் வரையிலும், கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் ஹற்றன் ரயில் நிலையம் வரையிலும் மட்டுப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், ரயில் மார்க்கம் மற்றும் ரயில் பெட்டிகளை பராமரிப்பதற்கு தேவையான உதிரிப்பா கங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

இதன் காரணமாக ரயில் சேவையை முறையாக பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், சில சமயங்களில் ரயில் தடம் புரள்வதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.